**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.TC. No.41/2025 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்து | த–பெ | காடோடி |
| ஊர்: | : | மதுரை | | |
| வயது: | : | 29/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர், சிவகங்கை நகர காவல் நிலையம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026**
**எதிரி ஆஜர்.**
-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மதுரையில் வசித்து சிவகங்கை நகர காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சாக்கோட்டை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக 2023 ம் ஆண்டு பணியில் இருந்த போது 08.12.2023 அன்று மதியம் 12.30 மணிக்கு நிலைய பணியில் இருந்தபோது கணேசன் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 339/2023 பிரிவுகள் 279, 337 ன் இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3.** பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் தமிழரசன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 4. பார்வை மகஜர் அசாஆ 5.**

வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடி சென்றபோது எதிரியானவர் 08.12.2023 அன்று 19.05 மணிக்கு சாக்கோட்டை காவல் நிலையத்தில் ஆஜர் ஆனவரை வழக்கு காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் இந்த வழக்கின் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் சிவகுமார் அரசு மருத்துவமனை சிவகங்கை என்பவரை விசாரணை செய்தபோது மேற்படி இந்த விபத்தில் காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் வகையை சார்ந்தது என்று அவர் சான்றிதழ் வழங்கினார். இதன் இடையில் மேற்படி காயம்பட்ட நபர் முதல் சிகிச்சைக்காக தேவக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அவருக்கு சிகிச்சை அளித்த அரசு

மருத்துவர் திருமதி சுதா அரசு மருத்துவமனை தேவக்கோட்டை என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து விபத்து பதிவேடு பெற்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **விபத்து பதிவேடு அசாஆ 6. மேற்படி தேவக்கோட்டை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ் அசாஆ 7. அரசு மருத்துவமனை சிவகங்கை மருத்துவ அறிக்கை அசாஆ 8**.

பின்னர் இந்த வழக்கின் தொடர்புடைய வாகனங்களை விபத்தாய்விற்காக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 விஜயகுமார் என்பவர் வசம் ஒப்படைத்து அவரிடம் இருந்து 05.02.2024 அன்று வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வாகன ஆய்வு அறிக்கை முறையே அசாஆ 9 மற்றும் அசாஆ 10.** மேற்படி பட்டியல் சாட்சிகள் 9 மற்றும் 10 ஆகியோர்களை விசாரணை செய்ததில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைக்கு ஏற்ப இவ்வழக்கின் சட்டப்பிரிவை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை கனம் நீதிமன்றத்தில் சமர்பித்தேன். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ 11.** வழக்கின் விசாரணை நிறைவு செய்து எதிரி மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 03.05.2024 அன்று மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

1. சம்பவம் நடந்த தேதி 07.12.2023 மாலை 5.30 மணி என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்த தேதி 08.12.2023 மதியம் 12.00 மணி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் புகாரை கால தாமதமாக கொடுத்ததற்கு காரணங்கள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன்விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.18 10:17:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.